அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 177/2016
தேதி: 22.11.2016

**இசை உலகிற்கு ஓர் இழப்பு**
**கர்நாட இசைக்கலைஞர் பாலமுரளிகிருஷ்ணா மறைவிற்கு**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித்**
**தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

பிரபல கர்நாடக இசைக்கலைஞர் பாலமுரளிகிருஷ்ணா அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக மறைந்தது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. இவரின் மறைவு இந்திய இசை உலகிற்கு ஓர் பெரிய இழப்பு. பிரபல பாடகராக இருந்த இவர் 400 படங்களுக்குமேல் இசையமைத்துள்ளார். இவரது தெளிவான தமிழ் உச்சரிப்பு மற்றும் கனீர் குரல் வளம் அவருக்கே உள்ள தனி பெருமையாகும்.

பத்ம விபூஷண், பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான செவாலிய விருது மற்றும் 2 முறை தேசிய விருது பெற்ற பெருமைக்குரிய இவர் பல இசை கருவிகளை இசைக்கும் திறமைபெற்றவர். இந்திய இசையின் பெருமைகளை பல நாடுகளுக்கு கொண்டுசென்றுள்ளார். இவரது மறைவு இசை உலகிற்கு ஓர் மாபெரும் இழப்பு. இவரது மறைவிற்கு என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர் சரத்குமார்** B Sc.
தலைவர் – பொதுச்செயலாளர்